மதுரை மண்டல கூடுதல் முதன்மை தலைமை வனப்பாதுகாவலர்
அவர்களின் செயல்முறை ஆணைகள்
பிறப்பிப்பவர் : திரு. சுப்ரத் மஹாபத்தர, இ.வ.ப.,
கூடுதல் முதன்மை தலைமை வனப்பாதுகாவலர்

செ.மு.ஆ. எண். 12361-1 / 2018 / ஆ1 நாள். 16.09.2019

பொருள்: பணி - தமிழ்நாடு அரசுப்பணியாளர் தேர்வாணையம் மூலம் நடைபெற்ற ஒருங்கிணைந்த குடிமையியல் பணி தேர்வுகள் தொகுதி - II (2017-18) (நேர்காணல் இல்லாத பதவி) - திரு.ர.இதயத்துல்லா நேரடி உதவியாளராகத் தெரிவு செய்யப்பட்டது - உதவியாளராகப் பணியில் சேர்ந்தது - பணியினை வரன்முறைப்படுத்துவது - தொடர்பாக.

பார்வை:
1) செயலாளர், தமிழ்நாடு அரசுப்பணியாளர் தேர்வாணையம் எண். 6021/PSD-D/2018, நாள்.1.11.2018.
2) முதன்மை தலைமை வனப்பாதுகாவலர் (து.த.), சென்னை, க.எண். ண2/ 37899 / 2018, நாள். 12.11.2018.
3) தலைமை வனப்பாதுகாவலர், மதுரை செயல்முறை ஆணை எண்.12361/18/ஆ1, நாள்.28.11.2018.
4) திரு.ர.இதயத்துல்லா தனியரின் பணிசேர் கடிதம் நாள்.6.12.2018

-----

திரு.ர.இதயத்துல்லா, உதவியாளர் தமிழ்நாடு அரசுப்பணியாளர் தேர்வாணையம் மூலம், நேரடி உதவியாளராகத் தேர்வு செய்யப்பட்டு பார்வை-2 இல் கண்ட முதன்மை தலைமை வனப்பாதுகாவலர் கடிதத்தின் மூலம் உதவியாளராக மதுரை மண்டலத்திற்கு ஒதுக்கீடு செய்யப்பட்டு, பார்வை 3 இல் காணும் தலைமை வனப்பாதுகாவலரின் பணி ஆணையின்படி மதுரை மண்டலம், தலைமை வனப்பாதுகாவலர் அலுவலகத்தில் காலியாகவுள்ள உதவியாளர் பணியிடத்தில் நேரடி உதவியாளராக பணியமர்த்தப்பட்டு 6.12.2018 முற்பகல் பணியில் சேர்ந்து, இவ்வலுவலகத்தில் பணிபுரிந்து வருகிறார்.

திரு.ர.இதயத்துல்லா, உதவியாளரின் அரசுப்பணியானது பார்வை 2 இல் கண்ட முதன்மை தலைமை வனப்பாதுகாவலரின் அறிவுரைப்படி, பணியில் சேர்ந்த நாளான 06.12.2018 முற்பகல் முதல் வரன்முறைப்படுத்தப்பட்டு, தமிழ்நாடு அரசுப்பணியாளர் (பணி நிபந்தனைகள் சட்டம்) விதி 2016 பிரிவு 28(1) இன் படி மூன்றாண்டுகளில் இரண்டாண்டுகள் தகுதி காண் பருவத்தில் வைக்கப்படுகிறார்.

மேற்படி பணிவரன்முறையானது, 2017-18 தொகுதி-II A பணிகளின் நியமனம் குறித்து மாண்புமிகு சென்னை உயர்நீதிமன்றத்தின், சென்னை மற்றும் மதுரை கிளையில் தொடரப்பட்ட வழக்குகளின் தீர்ப்புகளின் அடிப்படையில் எடுக்கப்படும் முடிவுகளுக்கு கட்டுப்பட்டது.

த.பி.பா.

திரு.ர.இதயத்துல்லா, உதவியாளர் மேற்படி தகுதிகாண் பருவகாலத்திற்குள், அரசாணை எண்.64 சுற்றுச்சூழல் மற்றும் வனத்துறை, நாள்.11.05.2018 இன் படி, Fundamental Rules of Tamil Nadu Government Tamil Nadu State Service Rules etc., மற்றும் Tamil Nadu Forest Departmental Code, and Accounts துறைத்தேர்வில் தேர்ச்சி பெற வேண்டும் எனத் தெரிவிக்கப்படுகிறது.

மேலும், திரு.ர.இதயத்துல்லா, உதவியாளர் மேற்படி தகுதிகாண் பருவத்திற்குள் அரசு அலுவலர் பயிற்சி நிலையத்தில் உதவியாளர் அடிப்படை பயிற்சியில் கலந்து கொண்டு தேர்ச்சி பெற வேண்டும் என்றும் தெரிவிக்கப்படுகிறது.

16/9/19

கூடுதல் முதன்மை தலைமை வனப்பாதுகாவலர்,
மதுரை வனமண்டலம், மதுரை.

16/9/19

பெறுநர்:
திரு.ர.இதயத்துல்லா, உதவியாளர்
கூடுதல் முதன்மை தலைமை வனப்பாதுகாவலர் அலுவலகம்,
மதுரை மண்டலம், மதுரை.

16/9/19

நகல்: பணிப்பதிவேட்டிற்கு.

நகல்: ஆ1 இருப்புக்கோப்பிற்கு.